13.03.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.43/2021

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராணி | சாதி | |
| க/பெ | கணேசன் | மதம் | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு காலனி | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 54/2023 |
| மாவட்டம் | | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பள்ளிப்புதுப்பட்டு காலனியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா.1 வாசுகி எனது தங்கை.இவ்வழக்கில் இறந்துபோன ராஜ்கிரன் எனது தங்கை மகன். ஆஜர் 2,3 எதிரிகள் எனக்கு தெரியும். 2வது எதிரி எனது தங்கை மகன் ராஜ்கிரனின் மனைவி, 3வது எதிரி 2வது எதிரியின் தாயார். 1,4 எதிரிகளை எனக்கு தெரியாது. ராஜ்கிரன் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். ராஜ்கிரன் பள்ளிநெலியனுர் ரயில்வே கேட் அருகில் இறந்துகிடப்பதாக எனது ஊரை சேர்ந்தவர்கள் தகவல் சொன்னார்கள். தகவல் கேட்டு நான் வீட்டில் அழுதுக்கொண்டிருந்தேன். ராஜ்கிரன் எவ்வாறு இறந்தார் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். ராஜ்கிரனும், அவரது மனைவியும் புதுக்காலனியில் குடியிருந்தார்கள். அவர்களுடையே குடும்ப பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுககு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

## அரசு தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவத்திற்கு 6 வருடங்களுக்கு முன்பு ராஜ்கிரனுக்கும் 2வது எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், அவர்கள் இருவரும் அடிக்கடி சண்டை போட்டுக்கொள்வார்கள் என்றும், சம்பவத்திற்கு 1வருடத்திற்கு முன்பு 2வது எதிரி கள்ளத்தொடர்பு காரணமாக வேறு ஒரு நபருடன் வீட்டை விட்டு சென்று அவருடன் சுமார் 1வருடம் சேர்ந்து வாழ்ந் வந்தார் என்றும், சம்பவத்திற்கு 1வாரத்திற்கு முன்பு தான் 2வது ராஜ்கிரன் வீட்டிற்கு திரும்பி வந்தார் என்றும், அதுவரையிலும் குழந்தைகளை அ.சா.1 தான் பராமரித்தார் என்றும், போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. 1,2 எதிரிகள் தாங்கள் ராஜ்கிரனை கொலை செய்து தண்டவாளத்தில் வீசியதாகவும் அதற்கு 3,4 எதிரிகள் துணையாக இருந்ததாகவும், 1,2 எதிரிகள் கிராம நிர்வாக அதிகாரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக கேள்விப்பட்டதாக போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ராஜ்கிரன் கொலை செய்யப்பட்ட விபரம் கேள்விப்பட்டவுடன் 3வது எதிரி பேரக்குழந்தைகளை அழைத்துக்கொண்டு வீட்டை விட்டு சென்று தலைமறைவானதாக போலீஸ் விசாரணையில் நான் சொன்னேன் என்றால் சரிதான். அவர்கள் சம்பவத்திற்கு ராஜ்கிரனின் வீட்டில இல்லை.

## எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

அசா1 எனது தங்கை ஆவார். கலா அவரது பேரக்குழந்தைகளை அழைத்து சென்றதே எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த விபரத்தை போலீஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

13.03.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண்.43/2021

அ.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வாசுகி | சாதி | |
| க/பெ | ராதாகிருஷ்ணன் | மதம் | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு காலனி | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 48/2023 |
| மாவட்டம் | | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பள்ளிப்புதுப்பட்டு காலணியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ராஜ்கிரன் எனது மகன். ஆஜர் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். 2வது எதிரி எனது மகன் ராஜ்கிரன் மனைவி, 3வது எதிரி 2வது எதிரியின் தாயார். 1,4 எதிரிகளை சம்பவத்திற்கு பிறகு தான் தெரியும். எனது மகன் ராஜ்கிரனுக்கும் 2வது எதிரிக்கும் எனது மகன் இறப்பதற்கு முன்பு 4 வருடங்களுக்கு முன்பு திருமணம் ஆனது. அவர்களுக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். ரீகன்,பிரியன் அவர்களது பெயர். எனது மகன் திருணமத்திற்கு பிறகு எனது மகன் புதுக்காலனியீல் புதுவீடு கட்டி தனிக்குடித்தனம் இருந்தார். நானும் எனது மகள் ரஞ்சிதாவும் எனது கணவர் ராதாகிருஷ்ணனும், பள்ளிப்புதுப்பட்டு காலனியில் இருந்தோம். எனது மகள் திருணம் ஏற்பாடு இருந்ததால் நாங்கள் புதுக்காலனியில் எனது மகன் வீட்டில் இருந்தோம். நான் சம்பவத்தன்று சாப்பாடு செய்துவிட்டு மணக்குப்பத்தில் பாராசூட் தேங்காய் எண்ணெய் கம்பெனிக்கு நைட்சிப்ட் வேலைக்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலை 6.00மணிக்கு வீடு

திரும்பினேன். பள்ளிநெலியனூர் ரயில்வேகேட் அருகில் தண்டவாளத்தில் எனது மகன் இறந்துகிடப்பததாக அவ்வழியே சென்றவர்கள் எனக்கு தகவல் கொடுத்தார்கள். ஊர் ஜனங்களோடு சம்பவ இடம் சென்றேன். காலை 7 மணியளவில் எனது மகனின் சடலத்தை பார்த்தேன். என்னென்ன காயம் என்று நான் கவனிக்கவில்லை. காலை 10மணியளவில் கண்டமங்கலம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் அசா.ஆ.1. நான் சம்பவத்திற்கு முந்திய தினம் வேலைக்கு செல்லும்போது எனது சம்மந்தியான கலாவும் எனது பேரப்பையன் இருவரும் வீட்டில் இருந்தார்கள். எனது மருமகளான 2வது எதிரிக்கு உடல்நிலை சரியில்லாததால் ஆஸ்பத்திரிக்கு எனது மகன் அழைத்து சென்றிருந்தார். எனது மகனும், மருமகளும் சேர்ந்து தான் வாழ்ந்து வந்தார்கள். குழந்தைகளை பார்ப்பதற்கு ஆள் இல்லை என்று சொல்லி அவரது தாய் வீட்டிற்கு எனது மருமகள் அடிக்கடி சென்றுவிடுவார். எனது மகன் அழைத்து வருவான். அவர்களுக்குகிடையே குடும்ப பிரச்சனை மட்டுமே உண்டு. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காவல்நிலையத்தில் கொடுத்த புகாரினை ஒரு போலீஸ்காரர்தான் எழுதினார். 1,4 எதிரிகளை போலீசார் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரிக்கும்போது நான் தினமும் தேங்காய் எண்ணெய் கம்பெனிக்கு நைட்சிப்ட் வேலைக்கு செல்வேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். எனது மகன் எப்படி இறந்தார் என்று எனக்கு நேரிடையாக தெரியாது. எனது மகன் இறந்துகிடப்பது பற்றி யார் தகவல் சொன்னார் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை.